# தூத்துக்குடி மாநகராட்சி
## கூட்டப்பொருள்

2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 29.01.<br>2021 | 1) மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள "சீர்மிகு நகரம்" (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட "சீர்மிகு நகரம்" (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண் (MALL) எண் 112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்தரவிட்டுள்ளது.<br>அதன்பேரில் தலைவர் தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட்டெட் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 10.05.06.07.09 நாள் 05.01.2021இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. | 3)அலுவலகக் குறிப்பு 1 பதிவு செய்யப்பட்டது.<br>அலுவலகக் குறிப்பு 2 அனுமதிக்கப்பட்டது. |
| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை (ரூ. கோடி) |
| 1 | மாநகராட்சிக்கு சொந்தமான தருவைக்குளம் பகுதியில் மக்காத குப்பைளை அகற்றுவதற்கான எரியூட்டும் அலை (Incinerator Plant) அமைக்கும் பணி | 1.70 |
| 2 | மாநகராட்சிக்குட்பட்ட சிவந்தாகுளம் மாநகராட்சி பள்ளி வளாகத்தில் உணர்வு பூங்கா (Sensory Park) அமைக்கும் பணி | 1.40 |
| 3 | மாநகராட்சி பள்ளியின் சீர்மிகு வகுப்பறைகளுக்கு மாணவ மாணவியர் பயன்படுத்தும் வகையில் டேப்லெட் (Tablet 1000 எண்ணம் கொள்முதல் செய்தல். | 1.50 |
| 4 | மாநகராட்சிக்குட்பட்ட கதிர்வேல் நகர் பகுதியில் Resource Recovery Centre அமைக்கும் பணி | 2.00 |
| | மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள பணிகளினை ஸ்மார்ட்சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு மேலாண்மை இயக்குநர் தூத்துக்குடி ஸ்மார்ட்சிட் லிமிடெட் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி செயல்முறை ஆணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் மேற்படி பணிகளுக்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் பதிவு செய்யலாம்<br>2) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>இ1/3209/2015 (W) | |

| | | |
|---|---|---|
| | 2)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் மழைநீரை வெளியேற்றும் பணியில் வடக்கு மண்டலத்திற்குட்பட்ட தாழ்வான பகுதிகளில் மழைநீரை வெறியேற்ற 160mm HDPE குழாய் மற்றும் 110160mm HDPE குழாய் மற்றும் 110mm HDPE கொள்முதல் செய்யும் பணிக்காக ரூ 2256000/– மதிப்பிடு தயாரிக்கப்பட்டு விதி எண். 15ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>பதிவு செய்யலாம். 80A/20/21/ AEE(N) | 4)பதிவு செய்யப்பட்டது |
| | 3)தூத்துக்குடி மாநகராட்சிக்கு எதிராக பல்வேறு வழக்குகள் உள்ளூர் நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களில் பல்வேறு வகையான வழக்குகள் தொடரப்பட்டு நிலுவையாக இருந்து வருகிறது. மேலும் இம்மாநகராட்சிக்கென சட்ட அலுவலர் பணியிடம் ஏதும் அனுமதிக்கப்படாததால் வழக்குகளை உரிய ஆவணங்களுடன் உரிய காலத்தில் சட்ட ரீதியாக எதிர்கொள்ள இயலாத நிலை உள்ளது.<br>எனவே இவ்வழக்குகளை முறையாக எதிர் வழக்காடவும் மற்றும் தேவையான தீர்வுகளுக்கு மேல்முறையீடு செய்வதற்கும் மற்றும் பிரத்தியோக நேர்வுகளில் சட்ட கருத்துரு கொடுப்பதற்கு ஏதுவாக தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் பார் கவுன்சிலிங்– ல் பதிவு செய்த வழக்கறிஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று நேர்காணல் நடத்தப்பட்டு அதில் தகுதி உடைய வழக்கறிஞரான அ.சிவிஜா (MS 2704/12) பி.ஏ. எம்.எல். தூத்துக்குடி என்பவரை இம்மாநகராட்சியின் சட்ட ஆலோசகராக தற்காலிகமாக நியமனம் செய்து வழக்கறிஞர் கட்டணமாக மாதம் ரூ. 20,000/– நிர்ணயம் செய்து மாமன்றத் தீர்மானம் எண். 207 நாள் 26.11.2019இல் ஒப்புதல் செய்துள்ளது.<br>அதன்பேரில் அன்னாரை இம்மாநகராட்சி சட்ட ஆலோசகராக 09.12.2019 முதல் ஒரு வருட காலத்திற்கு தற்காலிகமாக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது. அன்னாரின் பணிக்காலம் 10.12.2020 உடன் முடிவடைவதால் அன்னாரை மீண்டும் 11.12.2020 முதல் 10.12.2021 வரை ஒரு வருடம் இம்மாநகராட்சியின் சட்ட ஆலோசகராக தற்காலிகமாக நியமனம் செய்யவும் அன்னாரின் வழக்கறிஞர் கட்டணமாக மாதம் ரூ 20000/– மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம். சி1/553/2018 | 5) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 29.01.2021

ஆணையர்(ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி